1990 ஏப்ரல் 23]

(இ) காவிரி நீர்ப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று அனைத்துக் கட்சி எம். பி. க்கள் பாரதப் பிரதமரிடம் ஒட்டுமொத்தமாக வலியுறுத்த வேண்டிய அவசியம் குறித்து.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று கோரி தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாரத பிரதமர் திரு. சிங் அவர்களை டெல்லியில் சந்தித்து வலியுறுத்துவார்கள் என்று சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டது. அதைப் பற்றி சட்டமன்றத்திலே கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இன்றைக்கு அ. தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் ஒன்று சேர்ந்து பாரத பிரதமர் அவர்களை தனியாக வலியுறுத்தி மனு கொடுக்கப்போவதாகத் தெரிகிறது. ஆனால், கர்நாடகாவில் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து இந்த வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த நிலையில், தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் கூட அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த எம்.பி.க்களும் ஒன்று சேர்ந்து காவிரிப் பிரச்சினை குறித்து பாரதப் பிரதமரிடம் வலியுறுத்துவதுதான் நமக்கு வலிமையை சேர்க்கும். ஆனால் அ.தி.மு.க. மட்டும் தனியாகச் செல்வது வலுவை இழக்கச் செய்வதாகாதா என்பதைத்தான் நான் இந்த அவையின் மூலம் அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பிரச்சினையை இங்கே உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் நடைபெற்ற நிகழ்ச்சியை நான் முதலில் இங்கே தெரிவித்தாக வேண்டும். அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்ற அன்றைக்கு, அ.தி.மு.க. கலந்துகொள்வதா வேண்டாமா என்ற பிரச்சினை இருந்த நேரத்தில், முதல் முதலாக கர்நாடக முதலமைச்சரோடு பேச்சு வார்த்தை என்று வந்திருந்தால் நாம் அதிலே கலந்துகொள்வதில் தவறு இல்லை என்று முடிவு எடுத்தோம். ஆனால், நீண்ட, பல ஆண்டுக் காலமாக இருந்து வந்துள்ள பிரச்சினையில், விவாதம் நீண்டுக் கொண்டே, பல்வேறு காரணங்களைச் சொல்லி மீண்டும் மீண்டும் இந்தப் பிரச்சினை ஒத்தி வைக்கப்படுகிறது என்கிற நிலை இருப்பதாலே இந்தப் பிரச்சினையை நடுவர்மன்ற தீர்ப்பு ஒன்றினால்தான் தீர்வுக்கு கொண்டுவர முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை அ.தி.மு.க. வைப் பொறுத்த வரையிலும், புரட்சித் தலைவர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே முடிவு செய்து, அவர்கள் அது குறித்து அறிவித்தும் இருந்தார்கள். ஆனால் மீண்டும் இந்தப் பிரச்சினை ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், உச்சநீதிமன்றத்தில் 24 ஆம் தேதிக்குள் இந்தப் பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை மூலம் முடிய

வில்லை என்றால் நடுவர் மன்றத்திற்கு செல்ல வேண்டுமென்ற நிலை வந்துவிட்ட பிறகு, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப் படையில் இதை விடவேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்ற நிலையை எடுத்தோம்.

இந்த நிலையில், அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்ற போது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கர்நாடக முதலமைச்சர் அவர்களிடம் பேசும்போது நாங்கள் எல்லோரும் ஒத்த நிலையில் இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டி தான் அன்றைய கூட்டத்தில் நான் கூட கலந்து கொண் டேன். அப்போது கூட நான் மாண்புமிகு முதலமைச்சரிடத் தில் வற்புறுத்திச் சொன்ன கருத்து, அனைத்துக் கட்சித் தலைவர் களையும் அழைத்து பேசினால், அவர்களும் இந்தப் பிரச்சினை யிலே தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுவார்கள் என்று தான் அன்றைக்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதே போல அன்றைக்கு விவாதம் நடைபெற்ற போதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்திற்கு ஒரு வடிவம் தரும் நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாரத பிரதமர் அவர் களைச் சந்திக்க வேண்டுமென்ற வேண்டுகோளை தீர்மான வடிவிலே தர வேண்டுமென்று சொன்ன நேரத்தில் கூட நான் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி இருக்கிறேன். அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரை சந்திப்பது சாதாரண விஷயம், சர்வ கட்சித் தலை வர்களை அழைத்து பேசினால் எல்லோரும் அவர்களுடைய எண்ணங்களைச் சொல்வார்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முதல் நாளே அ.தி.மு.க. முடிவு எடுத்தது, பாரத பிரதமர் அவர்களைச் சந்தித்து நடுவர் தீர்ப்புக்கு விடுவதை வற்புறுத்த வேண்டும், அதை தீர்மான வடிவில் தயார் செய்து பிரதமரிடம் கொடுக்க வேண்டுமென்று அன்றைக்கே முடிவெடுத்து அதை பிரதமரிடத்தில் ஒப்படைப்பதற்கான வேலையில் ஈடுபட்டு இருக்கிறோம் என்பதை கூட்டத்தில், முன்னாலேயே அவர் களுக்கு நான் தெரிவித்திருக்கிறேன்.

10-10 மணி.

எனவே அந்த வகையிலே இதில் ஒரு பெரிய கருத்து வேறு பாடு இருக்கிறது என்று நாமாக உருவாக்கிக் கொண்டு, பிரச்சினை களை இதிலே விவாதித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசிய மில்லை. நடுவர் தீர்ப்பு என்பது அனைத்துக் கட்சிகளாலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. விரைவுபடுத்துவதற்கு மத்திய சர்க்காரை அனைவரும் வற்புறுத்துகிறோம். வழி முறைகளில் பல்வேறு மாற்றங்கள் இருக்கிறதே தவிர, நிச்சயமாக கருத்து வேறுபாடு இல்லை என்பதை அனைவரும் தெரிவித்தாகிவிட்டது.

1990 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. வல்லரசு அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்சினைக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதிலளித்து, இதிலே கருத்து வேறுபாடே இல்லை என்று திட்டவட்டமாகக் கூறியதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் இதில் ஏதோ நான் தவறு செய்து விட்டதாக வரக்கூடாது என்பதற்காக சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன். 19 ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திற்கு எதிர்க் கட்சித் தலைவரும் வந்திருந்தார். அப்போதே கூட்ட முடிவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள், டெல்லிக்குச் சென்று பிரதமர் அவர்களிடத்திலே நடுவர் மன்றத் தீர்ப்பை வலியுறுத்த வேண்டும்; ஏனென்றால் அன்று மாலை நடைபெற இருந்த கர்நாடக மாநில—தமிழ் மாநில பேச்சு வார்த்தைகளில் நமக்குச் சாதகமான முடிவு ஏற்படாவிட்டால் நடுவர் தீர்ப்பைத் தவிர வேறு வழியில்லை, எனவே டெல்லிக்குச் சென்று பிரதமரை நம்முடைய எல்லாக் கட்சி உறுப்பினர்களும் சந்திக்க வேண்டுமென்று குறிப்பிட்டேன். அப்போது எதிர்க் கட்சித் தலைவர் இந்தச் செய்தியை நாளைக்கு அறிவிக்கலாம், பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அறிவிக்கத் தேவையில்லை என்று சொன்னார்.

காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக வருகை தந்திருந்த திரு. மூப்பனார் அவர்களும் அதே கருத்தைச் சொன்னார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் அந்தக் கருத்தைச் சொன்ன பிறகு, இன்று அறிவிப்பதாக இல்லை, நாளைய தினம் நாம் எப்படிச் செயல்படப் போகிறோம் என்பதை முடிவு செய்வதற்காகத் தான் இந்த யோசனை சொன்னேன் என்று குறிப்பிட்டேன். பிறகு 19 .ஆம் தேதி மாலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தை தமிழகத்திற்குச் சாதகமாக அமையவில்லை. பின்னர் 20 ஆம் தேதி காலையிலே மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்ற போது எதிர்க் கட்சித் தலைவர் வரவில்லை. ஆனால் நான் கூட்டம் முடிந்த பிறகு இந்த அவைக்கு வந்து, எதிர்க்கட்சித் தலைவரிடத்திலும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்களிடத்திலும் எம்.பி.க்கள் செல்வதைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவர்கள் ஒப்புதல் அளித்தார்கள். பிறகு சி.பி.எம்., சி.பி.ஐ. மற்றும் நம்முடைய ஜக்கிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இந்தக் கட்சிகளைச் சார்ந்தவர்கள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (சமத்) பிரிவைச் சேர்ந்தவர்கள் எல்லாம் செல்வார்கள் ; திரு. துரைமுருகன் அவர்கள், பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையில் செல்வார் என்று பட்டியல் எழுதி, எதிர்க் கட்சித் தலைவரிடத்திலும் அந்தப் பட்டியலைக் காட்டினேன். காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களிடத்திலேயும் அந்தப் பட்டியலைக் காட்டினேன். இருவரும் ஒத்துக்கொண்டார்கள். இதைப் பத்திரிகைகளிடத்திலே கொடுத்துவிடுவதாக அவர்களிடத்திலே

சொன்னேன். சொல்லி விட்டு, இந்த அவையிலேயும் அதை அறிவித்தேன். பத்திரிகையிலும் அதைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே என்பால் எந்தக் குறையும் இல்லை என்பதையும், இதிலே ஒருமித்த கருத்து இருக்கிறதென்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதையும் நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். ஏனென்றால் வேறு எத்தனையோ பொதுப் பிரச்சினைகளிலே கூட, ஒரு சில ரிசர்வேஷன், அந்தந்தக் கட்சிகளுக்கு இருப்பது உண்டு. அது கூட இல்லாமல், எல்லோரும் ஒருமித்த குரலில் நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று இந்தப் பிரச்சினையில் அணுகி இருக்கிற காரணத்தாலே தான் ஒன்றாகச் சென்றிருக்கலாம். இருந்தாலும் அதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையால், எதிர்க் கட்சித் தலைவருக்கே உடன்பாடு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கக் கூடும் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் அன்றைக்கே அவர்கள் இங்கே ஒத்துக் கொண்டார்கள். அப்படி ஒத்துக்கொண்ட சூழ்நிலைக்குப் பிறகு, எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டிருந்தாலும் கூட, ஒத்த கருத்து உடையவர்கள் தான் என்று அவர்கள் இங்கே உரைத்த வாய்மைக்காக நான் அவரைப் பாராட்டி, இந்தக் கருத்தை வரவேற்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் விளக்கம் தருகிற வகையிலே கடைசியாக ஒன்றைச் சொல்லிவிட்டார்கள். ஆனால் அது ஒரு விவாதத்திற்குரிய பிரச்சினையாகிவிடும் என்பதால் தெளிவு படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். நான் சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொள்ள வேண்டுமென்று முடிவு எடுக்க வேண்டுமென்று கட்சியிலே கேட்ட நேரத்திலே, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைக்க வேண்டுமென்று வற்புறுத்துங்கள் என்று சொன்னார்கள். அதை நான் சர்வ கட்சிக் கூட்டத்திலே வற்புறுத்தினேன். சட்டமன்றக் கட்சிகளை மட்டும் அழைக்க வேண்டாம், அனைத்துக் கட்சிகளையும் அழைக்க வேண்டுமென்று சொன்னேன். ஆனால் அதற்கு முதல் அமைச்சரவர்கள் எந்தப் பதிலும் சொல்லவில்லை. ஆனால் அதற்கு முன்னாலேயே எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அப்படி ஈடுபட்ட முயற்சியை தடை செய்வதா, வேண்டாமா என்று வருகிற நேரத்தில் தனியாகவே நாம் சந்திக்க வேண்டுமென்ற நிலையை எடுத்தார்கள்.

10-15 மணி.

அந்த நிலையில் நான் எந்தக் குழப்பமும் அடையவில்லை. அதே போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும் போது என்னை மீறியோ, எனக்குத் தெரியாமலோ அந்தக் கருத்திலே நான் முரண்பாடாக இருக்கிறேன் என்று கூடச் சொல்ல முடியாது. நிச்சயமாக அவர்கள் எடுத்த முடிவு சரியான முடிவு ; அவருடைய முடிவுதான் நல்ல முடிவு என்பது

1990 ஏப்ரல் 23] [திரு. எஸ். ஆர், இராதா]

என்னுடைய கருத்து. ஆனால் நான் சொன்னது, நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டும் என்பதில் இன்றைக்கு அனைவரும் ஒரே நிலைக்கு வந்து இருக்கிறோம் என்பதிலே ஒத்த கருத்து இருக்கிறது. அந்தக் கருத்தை வலியுறுத்தினால் போதும் என்று தான், விவாதம் வேண்டாம், விவகாரம், பிரச்சினை வேண்டாம் மறுபடியும், பழைய நிலைகளைப் பேசிக்கொண்டு இருக்க வேண்டாம் என்பதனாலேதான் தெளிவுபடுத்தினேன்; பழைய நிலைகளைப் பேச வேண்டுமானால் மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டு இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதிலே விவாதிக்க நான் விரும்பவில்லை. விவாதிப்பதன் காரணமாக கருத்து வேறுபாடுகள் எழுந்து நம்முடைய பிரச்சினையினுடைய மூல நோக்கத்தை முனை முறியச் செய்யவும் நான் விரும்பவில்லை. ஆனால் அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அந்தப் பட்டியலை நான் இரண்டு பேரிடத்திலும் காட்டிய போது, இந்த நிலையை என்னிடத்தில் விளக்கி இருப்பாரேயானால் அவையில் அ.தி.மு.க. எம்.பி.க்களினுடைய பெயரையும் சேர்த்து அன்றைக்குச் சொல்லி இருக்க மாட்டேன், அவ்வளவுதான்.

திரு. எஸ். ஆர். இராதா : நீங்கள் அன்றைக்கு அறிவித்த நேரத்திலே ஒன்று கேட்டார்கள். எல்லோருக்கும் விமான டிக்கெட் எடுக்கட்டுமா என்று கேட்டார்கள். நான் அப்போதே சொன்னேன், விமான டிக்கெட் வேண்டாம் , அவரவர்கள் வருவார்கள் என்று சொன்னேன்.. நீங்கள் அதையே புரிந்துகொண்டு இருக்க வேண்டும்.

(ஈ) குளிர்பானங்களில் புரோமின் தாவர எண்ணெய் கலந்துள்ளதால் அவற்றைப் பருகும் மக்கள் நலம் பாதிக்கப்படுவது குறித்தும், அப்பானங்கள் விற்பனையைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்.

*திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, கோடைக் காலம் துவங்கிவிட்டது. கோடைக் காலத்தின் வெப்பத்தையும், கடுமையையும் தவிர்க்க சாஃப்ட் டிரிங்க்ஸ் என்று சொல்லப்படும் குளிர் பானங்களை சென்னை போன்ற நகரங்களில் மட்டுமல்லாமல் மாவட்டங்களிலும், கிராமப்புறங்களிலும் கூட அங்கு வாழ்கின்ற தமிழக மக்கள் குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள் வாங்கிக் குடிக்கிறார்கள். இவ்வாறு மக்கள் பிரியமாக வாங்கிக் குடிக்கின்ற சில பிரபலமான குளிர்பானங்களில் உதாரணமாக லிம்கா, கோல்டு ஸ்பாட், கேம்பா ஆரஞ்சு, ஸ்பிரிண்ட் போன்றவைகளில் புரோமினேடட் வெஜிடபுள் ஆயில் அதாவது புரோமின்